[8th August 1966

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அக்வொயர் செய்து நோட்டிஃபிகேஷன் செய்கின்ற ஸ்டேஜில் இருந்தபோதுதான் இது நிறுத்தப்பட்டது. இப்போது அக்வொயர் செய்யவேண்டிய அவசியமில்லை. அக்வொயர் செய்கின்ற நேரத்தில் முனிசிபாலிட்டிகளுக்கு கொடுத்து பின்னால் அக்வொயர் செய்து கொள்ளலாம், இப்போது தேவையில்லை என்று முடிவு செய்திருப்பதால்தான் இல்லை என்று பதில் கூறினேன்.

சினிமாக்களுக்கு அனுமதி

***237 கேள்வி.—திரு. நா. இராசாங்கம் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) டூரிங் சினிமாக்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அனுமதி (Licence,) வாங்க வேண்டுமென்று அரசாங்கம் ஏதேனும் விதி பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போதிலிருந்து அமல் நடத்தப்படும்?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) No. (b) Does not arise.

திரு. செ. மாதவன் : பெர்மனன்ட் தியேட்டர்களுக்கு நிரந்தரமாக லைசென்ஸ் கொடுப்பதுபோன்று, இப்படிப்பட்ட டூரிங் தியேட்டர்களுக்கு மட்டும் ஆறு மாதம், ஒரு வருடம் என்று கொடுக்கவேண்டிய அவசியமென்ன? இவற்றிற்கும் நிரந்தரமாக லைசென்ஸ் கொடுப்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், ஃபிலிம் சேம்பர் ஆஃப் காமர்ஸ் ரெப்ரஸென்டேட்டிவ்ஸ் வந்திருந்து அவர்களுடைய கஷ்டங்களை எடுத்துக் கூறினார்கள். அப்போது டூரிங் சினிமாக்களுக்கு இரண்டு வருடங்களுக்கு அனுமதி கொடுக்கலாமா என்று கேட்டபோது, அவ்விதம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதியதால்தான் இதை ஓராண்டு என்று இப்போது போட்டிருக்கிறோம்.

Public Health Engineering Division

*238 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state the works proposed to be executed by the Public Health Engineering Division at Madurai?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : A statement[a] is placed on the Table of the House.

திரு. வை. சங்கரன் : குறிப்பாக இதில் மதுரை சப்ளைத் திட்டம் முதலாவதாக போட்டிருக்கிறது. இதில் முக்கியமாக பல மெயின்களை மாற்றவேண்டும். ஆகவே, இதிலிருக்கின்ற அவசரத்தையும் அவசியத்தையும் கருதி முதலாவதாக எடுத்துக்கொண்டு சீக்கிரமாக நிறைவேற்றி வைப்பதற்கு சர்க்கார் உத்தரவு பிறப்பிக்குமா ?

---

[a] Printed as Appendix IV on page 130.